# சிலாபம் பிரதேச சபை

## புத்தளம் மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 19 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 24 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 28 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சிலாபம் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்த களஞ்சிய இருப்புக்களின் பெறுமதி ரூபா 5,072,497 ஆகும்.

(ஆ) 2013 ஆண்டின் போது உதவி நிதியாகக் கிடைத்திருந்த ரூபா 186,000 தொகை பெறுமதியான இலக்கம் NW UC 9950 கொண்ட மோட்டார் சைக்கிளை கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட 13 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பட்டோலையின் பிரகாரம் நேரொத்த பெறுமதிகளிடையே ரூபா 78,414,236 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 5 கணக்கு மீதிகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 329,536,572 தொகைக்காக போதியளவு சான்றுகள் காணப்படாமையால் அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

2. நிதி மீளாய்வு

-----------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,131,997 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போதான மிகை ரூபா 15,345,092 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------------------

(i) தலைவரினால் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த நிலுவை வருமானம் பற்றிய தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திரண்ட நிலுவையாக வீத வரி ரூபா 2.2 மில்லியனும் வாடகை ரூபா 1.1 மில்லியனும் ஏனைய வருமானங்கள் ரூபா 120.7 மில்லியனும் ஆக காணப்பட்டது.

(ii) மீளாய்வாண்டிற்கான நிலுவை வரி வருமானம் என ஒரு வருடத்திற்கு மிகையான காலம் முதல் காணப்படும் ரூபா 2,594,637 இற்கான நிலுவை வரி வருமானம் ஒன்றும், ஏனைய வருமானங்கள் கடன்பட்டோரில் ரூபா 54,434,231 இற்கான நிலுவை வருமானம் ஒன்றும் காணப்பட்டது.

2.2.2 வீத வரி

----------------

மீளாய்வாண்டின் போது ரூபா 2,189,689 இற்கான நிலுவை வீத வரி தொகையினை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மாகாண பிரதான செயலாளரிடமிருந்து தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியிருந்த நீதி மன்றத் தண்ட வருமானம் ரூபா 15,418,736 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 62,988,004 ஆகும்.

2.2.4 அறிவித்தல் பலகைக் கட்டணம்

-----------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 38 நிரந்தர அறிவித்தல் பலகைகளில் 6 அறவித்தல் பலகை தொடர்பாக மாத்திரமே காட்சிப்படுத்தும் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் காட்சிப்படுத்தும் கட்டணம் அறவிப்படாத அறிவித்தல் பலகை 84 சதவீதமாகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

மனித வள முகாமைத்துவம்

-------------------------------------------------

இரண்டாம் மற்றும் ஆரம்ப தர பதவிகளில் ஆளணிக் கோப்பின் மிகை 11 ஆகக் காணப்பட்டதுடன் ஆரம்ப தரத்தில் உள்ளவாறான ஆளணிகளில் அமைய/ பிரதியீட்டு பதவியணி எண்ணிக்கை 22 ஆகக் காணப்பட்டதுடன் அவர்களின் சம்பளங்கள் மீளளிப்பு செய்வதற்கு முடியாமையால் சபை நிதியத்தில் இருந்து சம்பளம் செலுத்த நேரிட்டுள்ளது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

ஏற்பாடுகளை மிகைத்து செலவுகள் மேற்கொள்ளல்

-----------------------------------------------------------------------------------

(i) மீளாய்வாண்டின் போது வழங்கல்கள், உபகரணங்கள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதியை மிகைத்து ரூபா 5,780,019 செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது பாதீட்டுப் பெறுமதியில் நூற்றிற்கு 46 ஆகும்.

(ii) மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவுகளின் கீழ் டிபர் வண்டி ஒன்று கொள்வனவு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு பெறுமதியை மிகைத்து ரூபா 1,000,000 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத்துடன் அவை பாதீட்டு பெறுமதியில் நூற்றிற்கு 25 ஆகும்.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு